வரிகணக்குத்தாக்கல்: புதியசிக்கல்கள்... தவிக்கும்வரிதாரர்கள்!


சதீஷ்குமார்

**வ**ரிகணக்குத்தாக்கல்செய்யும்காலம்ஆரம்பித்துவிட்டது. மாதசம்பளக்காரர்கள்கடந்தநிதிஆண்டுக்கானவரிகணக்குவிவரத்தைவரும் ஜூலை 31-ம்தேதிக்குள்தாக்கல்செய்யவேண்டும்.

இதற்கிடையில்மத்தியஅரசுவருமானவரிதாக்கல்செய்வதில்சிலமாற்றங்களைக்கொண்டுவந்துள்ளது. இந்தபுதியமாற்றங்களால்என்னமாதிரியானபிரச்னைகள்எழும், இதனால்வரிகணக்குத்தாக்கல்எப்படி சிக்கல்கள்நிறைந்ததாகமாறியிருக்கிறதுஎன்பதைவிரிவாகவிளக்குகிறார் ஆடிட்டர்எஸ்.சதீஷ்குமார்.

***மாற்றங்கள்:***

''சிபிடிடி (CBDT) என்கிறசென்ட்ரல்போர்டுஆஃப்டைரக்ட்டாக்ஸ்அமைப்பு 15 ஏப்ரல் 2015-ல்வருமானவரித்தாக்கல்செய்வதில்சிலமாற்றங்களைகொண்டுவந்திருக்கிறது. அந்தமாற்றங்கள்என்னென்னஎன்பதைச்சொல்கிறேன்.

1. வருமானவரிதாக்கல்செய்பவர், வரித்தாக்கல்செய்யும்ஆண்டில்அதாவது, 2015 - 2016 நிதிஆண்டில்தாக்கல்செய்கிறீர்கள்என்றால், 2014 - 2015 நிதிஆண்டில்நீங்கள்பயன்படுத்தும்பழைய, புதிய, செயல்படும், செயல்படாத, பயன்படுத்திரத்துசெய்தவங்கிக்கணக்குகளின்விவரங்களைவரித்தாக்கலின்போதுஆதாரங்களுடன்குறிப்பிடவேண்டும்.




2. வெளிநாட்டுக்குபயணம்செய்திருந்தால், வருமானவரிதாக்கல்செய்யும்போது, வெளிநாட்டுபயணங்கள்குறித்தவிவரங்களையும்குறிப்பிடவேண்டும். அதாவது, 2014 - 2015 நிதிஆண்டில்வெளிநாட்டுபயணங்கள்மேற்கொண்டிருந்தால் 2015 - 2016-ஆம்ஆண்டுவரிதாக்கல்செய்யும்போதுபாஸ்போர்ட்எண், எந்தெந்தநாடுகளுக்குசென்றுள்ளீர்கள், எத்தனைமுறைசென்றுள்ளீர்கள், வெளிநாட்டில்எவ்வளவுதொகைசெலவுசெய்தீர்கள், செலவுசெய்ததொகையில்நிறுவனம்கொடுத்ததொகைஎவ்வளவு, நீங்கள்சொந்தமாகசெய்தசெலவுகள்மற்றும்அதன்விவரங்கள், ஏதாவதுஸ்பான்சர்மூலம்சென்றிருந்தால், அதன்விவரங்கள்போன்றவைகளைஆதாரத்துடன்குறிப்பிடவேண்டும்.

3. ஒருகோடிரூபாய்க்குக்கீழ்டேர்னோவர்உள்ளநிறுவனங்கள், மாதசம்பளதாரர்கள், இதரவருமானம்சம்பாதிப்பவர்கள்போன்றவர்களுக்குவரித்தாக்கல்செய்யகடைசிதேதி 31 ஜூலை 2015 என்றுஅறிவிக்கப்பட்டுஇருக்கிறது. ஆனால், வரித்தாக்கல்செய்யபடிவங்கள்மற்றும்அதனைஎப்படிபூர்த்திசெய்யவேண்டும்என்கிறவிவரக்கையேடு (ஸ்கீமா) இதுவரைவெளியாகவில்லை. இதனால்வரித்தாக்கல்செய்யநினைப்பவர்கள்அதைசரிவரசெய்யமுடியாமல்கஷ்டப்படவேண்டிஇருக்கிறது. 31 ஜூலை 2015-க்குப்பிறகுவரித்தாக்கல்செய்தால், அவற்றைமாற்றஇயலாது. அதாவது, தவறாகவரிகணக்குத்தாக்கல்செய்தால்அவற்றைத்திருத்தமுடியாது. ஆனால், 31 ஜூலை 2015-க்குமுன்வரிதாக்கல்செய்தால், தவறாகவரிதாக்கல்செய்திருந்தாலும்மீண்டும்சரியாகவரிதாக்கல்செய்யலாம்.

4. வருமானவரிகணக்குத்தாக்கல்செய்வதோடு, தாக்கல்செய்தபடிவத்தின்நகலைபெங்களூருவில்உள்ளவரிகணக்குபரிசீலனைஅலுவலகத்துக்குஅனுப்பவேண்டும். வருமானவரிதாக்கல்செய்பவரின்ஆதார்அட்டை, பான்அட்டையோடுஇணைக்கப்பட்டிருந்தால், அவர்பெங்களூருக்குவரிதாக்கல்செய்தபடிவத்தைநகலெடுத்துஅனுப்பத்தேவையில்லை.

**முரண்பாடுகள்!**

1. வரிதாக்கல்செய்யும்போது, வரிதாரரின்அனைத்துவங்கிக்கணக்குகளையும்காட்டவேண்டும்என்றுவருமானவரித்துறைஅறிவுறுத்துவதுசரிதான். ஆனால், வருமானவரிஅலுவலகமேவழங்கியபான்அட்டையின்பயன்பாடுஎன்னஎன்பதைஇந்தஇடத்தில்கேட்காமல்இருக்கமுடியவில்லை. ஒருவரின்பணப்பரிவர்த்தனைகளைமொத்தமாககண்காணிக்கும்பான்அட்டையைவழங்கிவிட்டு, மீண்டும்வரிசெலுத்துபவரிடமேவங்கிபற்றியவிவரங்களைகேட்பதுஏன்என்றுபுரியவில்லை.



2. வங்கிக்கணக்கைப்பற்றிகேட்கும்வருமானவரித்துறை, வங்கியில்முதலீடாகஇருக்கும்ஃபிக்ஸட்டெபாசிட், ஆர்டிகணக்குகள், கடன்கணக்குகளானஓவர்டிராஃப்ட், கிரெடிட்கார்டு, டேர்ம்லோன்போன்றவைகளைப்பற்றிஎதையும்குறிப்பிடவில்லை.

3. உச்சநீதிமன்றம்ஆதார்அட்டையைகட்டாயமில்லைஎன்றுதெளிவாகக்கூறுகிறது. ஆனால்வருமானவரித்துறையோ, பான்அட்டையைஆதார்அட்டையுடன்இணைத்திருப்பவர்கள்மட்டும்தாங்கள்தாக்கல்செய்தநகலைபெங்களூருவருமானவரிஅலுவலகத்துக்குஅனுப்பத்தேவையில்லைஎன்கிறது. வருமானவரித்துறையிடம்வரியைதாக்கல்செய்தபிறகு, அதேவருமானவரித்துறையின்வேறுஒருஅலுவலகத்துக்குவரிதாரர்ஏன்நகலைஅனுப்பவேண்டும்?

வருமானவரித்துறையேதன்கிளைஅலுவலகத்திலிருந்துகேட்டுவாங்கிக்கொள்ளமுடியாதாஎன்கிறகேள்விஎழுவதுஇயற்கைதானே!

4. வருமானவரித்துறை, பாஸ்போர்ட்அலுவலகத்துடன்கலந்தாலோசித்துவரிதாரர்எந்தநாட்டுக்கெல்லாம்பயணித்திருக்கிறார்என்கிறவிவரங்களைவாங்கமுடியாதா? வெளிநாடுகளில்வேலைபார்த்துசொந்தநாட்டுக்குபணம்அனுப்புவதில்நம்இந்தியா 70.39 பில்லியன்டாலர்களைப்பெற்றுமுதலிடத்தில்இருக்கிறது. அதாவது, என்ஆர்ஐகள், வெளிநாட்டில்வேலைபார்க்கும்இந்தியர்கள்மட்டும் 2014-ம்ஆண்டில்இந்தியாவுக்குஅனுப்பியதொகை 70.39 பில்லியன்டாலர்கள். வெளிநாட்டுக்குபோய்வேலைசெய்பவர்கள்அனைவரும்மெத்தப்படித்தவர்கள்இல்லை. சாதாரணகூலிவேலைகூடபார்க்கிறார்கள். இவர்களால்எப்படிஇதையெல்லாம்கணக்குக்காட்டமுடியும்?

5. என்ஆர்ஐ-ஆகஇருப்பவர்கள்இந்தியாவுக்குநிரந்தரமாககுடியேறும்போது, அவர்களிடமும்இந்தந்தவிவரங்கள்கேட்கப்படும்என்பதைஎல்லாம்விளக்காமலேயேஅதிரடியாகஒருமுடிவுஎடுத்திருக்கிறதுவருமானவரித்துறை.

6. சரல்என்றஒருஎளிமையானவரிதாக்கல்படிவம்இருந்ததைமாற்றி, தற்போதுஐடிஆர் 1 முதல்ஐடிஆர் 7 வரைபலபடிவங்கள்இருக்கின்றன. இதில்எந்தஐடிஆரையார்தாக்கல்செய்யவேண்டும்என்பதேபுரியாதஅளவுக்குகடினமானதாகவும், குழப்பத்துக்குவழிவகுப்பதாகவும்இருக்கிறது.

**என்னபிரச்னை?**

வருமானவரிதாக்கல்செய்யும்போதுவங்கிக்கணக்குபற்றியவிவரங்களில்வங்கியின்ஐஎஃஎஸ்சி (IFSC) எண், ஜாயின்ட்அக்கவுன்ட்ஹோல்டர்என்றால்உங்களுடையவிவரத்தோடுஜாயின்ட்அக்கவுன்ட்ஹோல்டர்களின்விவரங்களையும்கொடுக்கவேண்டும். அதாவது, வங்கிக்கணக்கைபயன்படுத்துவோரின்விவரம், வங்கியின்கிளை, கணக்குஎண், 31 மார்ச் 2015 அன்றையநிலவரப்படிகணக்கில்இருக்கும்மொத்தத்தொகைஎன்றுஅனைத்தையும்குறிப்பிடவேண்டும். இதில்காலாவதியானகணக்குகளையும்குறிப்பிடவேண்டும்என்பதுநடைமுறையில்சாத்தியமாகாதஒன்றாகவேதோன்றுகிறது.

இன்றுவேலைக்குபோகத்தொடங்கியஇளைஞர்கள்கூடகுறைந்தபட்சம் 2 முதல் 4 வங்கிக்கணக்குகளைவைத்துபயன்படுத்துகிறார்கள். இப்படிஇருக்கும்போதுஆண்டுக்கு 5 - 10 லட்சம்வருமானம்பெறக்கூடியநடுத்தரக்குடும்பத்தைச்சேர்ந்தநபர்கள்தாராளமாகதங்கள்குடும்பத்துக்கும்சேர்த்துகுறைந்தபட்சம் 6 வங்கிக்கணக்குகளையாவதுபயன்படுத்துவார்கள். அதோடுஒருகுடும்பத்தில்ஒருமுறையாவதுவங்கிக்கணக்கை ரத்து செய்திருப்பார்கள். அப்படிரத்துசெய்தவங்கிக்கணக்குவிவரங்களைஎல்லாம்இதில்குறிப்பிடவேண்டும்என்றால்வரிகணக்குதாக்கல்செய்பவர்கள்கஷ்டப்படமாட்டார்களா?




கறுப்புப்பணத்தைமீட்கத்தான்இந்தநடவடிக்கைகள்என்றுஅரசுசப்பைக்கட்டுகட்டினாலும், எந்தகறுப்புப்பணமுதலைகளும்தங்கள்கறுப்புப்பணத்தைஇந்தியவங்கிகளில்வைத்திருப்பதில்லை. கறுப்புப்பணம்எல்லாம்சுவிஸ்வங்கியில்பணமாகவைத்திருக்கிறார்கள்என்பதுஇந்தியாவில் குழந்தைக்குகூடத்தெரியும்.

வருமானவரிவரம்பில்வரும்நபர்கள், தங்கள்பணத்தைசரியாகநிர்வகிக்கவில்லைஅல்லதுதிட்டமிட்டுமுதலீடுகளைமேற்கொள்ளவில்லை என்றால்குறைந்தபட்சம்அரசுக்கு 25 - 60% வரைவரியாகசெலுத்துகிறார்என்றுஅர்த்தம். எப்படிக்கணக்கிட்டாலும்வருமானவரிவரம்பில்வருபவர்கள், வாங்கும்பொருட்களுக்குஇறக்குமதிவரி, சுங்கவரி, கலால்வரி, நகராட்சிவரி, குடிநீர்வரி, சாலைவரிஎன்கிறபெயரில்சரசரியாக 3 - 12% வரியையும், சேவைகளுக்கு 12.36 சதவிகிதமும், வாங்கும்பொருட்களுக்கு 14 சதவிகிதம்வசூலிக்கப்படுகிறது.

இன்றுகடைகளில்விற்கப்படும் பொருட்கள்அல்லதுசேவைகள்அனைத்தும்சேவைவரிஅல்லதுவாட்டின்கீழ்வந்துவிடுகிறது. எனவே, மொத்தமாகவரிமட்டுமே 25- 60% வரைவரிவசூலிக்கிறார்கள்.

ஒவ்வொருவரிகணக்குபடிவத்திலும் 20 பக்கங்களுக்குமேல்உள்ளது. இந்தப்படிவத்தைபூர்த்திசெய்வதில்குழப்பம்அதிகம்இருக்கிறது. இதைநிரப்புவதற்குஒருவரதுவேலைப்பளுகூடும். அதிககாகிதவேலைகளுக்குவேண்டிநேரவிரயம்மற்றும்பணவிரயமாவதுஎன்றுபலபிரச்னைகள்உருவாகின்றன. ஒவ்வொருவருடமும்அரசு, வரிகணக்குதாக்கலைஎளிமையாக்குகிறேன்என்றுஏதாவதுஒருபுதியகணக்கீடுகளையோ,

புதியபடிவங்களையோ, விதிகளையோமாற்றிக்கொண்டேஇருக்கிறது.
இதனால்வரிதாரர்களின்வேலைகுறைந்தபாடில்லை, மாறாகஅதிகரித்துக்கொண்டேபோகிறது.

ஆடிட்டர்மூலம்தாக்கல்செய்யப்படும்வருமானவரிப்படிவத்தில்தரப்பட்டுள்ளஅனைத்துக்கட்டங்களையும்நிரப்பித்தான்தாக்கல்செய்யப்படவேண்டும்.
இதனால்வரிதாரர்களும்ஆடிட்டர்களைஅணுகாமல்அவர்களேவரிப்படிவத்தில்தங்கள்ஆண்டுவருமானத்தைமட்டும்எழுதிவிட்டு,
கையெழுத்துப்போட்டுபடிவத்தைச்சமர்பித்துபிரச்னையைவிலைகொடுத்துவாங்கிக்கொள்கிறார்கள்
.

ஆன்லைனில்வருமானவரிதாக்கல்செய்யமுடியும்என்பதுமட்டுமேஇதுவரைவருமானவரித்துறைகொண்டுவரப்பட்டமாற்றங்களில்நல்லமாற்றம்என்றுசொல்லலாம்.
அதையும்கூடசரிவரசெய்யாமல்வரிதாக்கல்செய்தபடிவத்தைநகல்எடுத்துபெங்களூருக்குஅனுப்பவேண்டும்என்றுசொல்கிறதுவரித்துறை.

கல்விநிறுவனங்கள், மருத்துவமனைகள்,
ஆசிரமங்களுக்குவருமானவரிவிலக்குஅளிப்பதைவிடஇலவசகல்வி,
மருத்துவசேவைமற்றும்சமூகசேவைசெய்யும்நிறுவனங்களுக்கு
மட்டும்வரிவிலக்குஅளித்தால்அரசுக்குதேவையானவரிஎளிதாகக்கிடைத்துவிடும்.
அதோடுஉண்மையாகசமூகசேவைசெய்பவர்களுக்குஊக்குவிப்பாகவும்இருக்கும்’’
என்றார்ஆடிட்டர்சதீஷ்குமார்.

அரசாங்கங்கள்மாறினாலும், வரிதாரர்களைகையாளும்விதம்மட்டும்மாறவில்லை.
சரியாகவரிசெலுத்துபவர்களைஊக்குவிக்காமல், மீண்டும்மீண்டும்தொல்லைகொடுப்பதுசரிதானா

**படம்: எம்.உசைன்**

**மு.சா.கௌதமன்**